**தகவலறியும் உரிமை (RTI) அளவளாவல் கலந்துரையாடல் அறிமுகம்**
**மே 16, 2016, வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல், கொழும்பு, இலங்கை**

**அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் அவர்களின் உரை**

கௌர அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், வந்திருக்கும் அனைவருக்கும்,

வெளிப்படைத்தன்மை மற்றும் அரசாங்கம் குறித்த உட்குறிப்புக்கான பிரஜைகளின் அணுகும் வசதியை விரிவாக்குவதற்கு வடிவமைக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டமூலத்தின் உருவாக்கம் குறித்து கலந்துரையாடும் இந்த நிகழ்வில் உரையாற்ற கிடைத்தமை பெருமை தருகின்றது.

தம்மை தெரிவு செய்த பிரஜைகளுக்கு நம்பகமாக அரசாங்க அதிகாரிகள் இருக்க வேண்டும் என ஜனநாயகம் கோருகின்றது. அந்த நம்பகத்தன்மைக்கு வெளிப்படைத் தன்மை அவசியமாகும். இன்றைய உங்களுடைய கலந்துரையாடல்கள் ''பொதுமக்களுக்கு தகவலுக்கான அணுகும் வசதியை உறுதி செய்தல் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை பாதுகாத்தல்'' என்ற ஐக்கிய நாடுகளின் 2030ஆம் ஆண்டுக்கான நிலையான அபிவிருத்தி இலக்குகளில் பிரதிபலிகப்பட்டுள்ளதைப் போன்று, உலக சமுதாயத்தில் வளர்ந்து வரும் ஒருமித்த உணர்வை பிரதிபலிக்கின்றன.

தமது அரசாங்கம் என்ன செய்கின்றது என்பதனை கண்காணிப்பதற்கான உரிமையை எமது பிரஜைகள் கொண்டிருப்பதனை உறுதி செய்வதற்கு உருவாக்கப்பட்ட தகவல் சுதந்திர சட்டத்தின் தமது 50 வருட நிறைவினை இந்த வருடம் அமெரிக்கா கொண்டாடுகின்றது. அது பயணித்த பாதை இலகுவானது இல்லை. 1955ஆம் ஆண்டில் கலிபோர்னியாவைச் சேர்ந்த சட்டவாக்குனரால் முதலில் உருவாக்கப்பட்ட போதிலும், 1966ஆம் ஆண்டின் பிற்பகுதி வரையிலும் அவரால் அதற்காக போதியளவு ஆதரவினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இயற்றப்பட்டதன் பின்னரும் கூட, ஒவ்வொரு அமெரிக்க மத்திய அரசாங்கம் மற்றும் திணைக்களத்தினால் அது எதிர்க்கப்பட்டது.

இந்த வருடங்களில் நாம் கற்றுக் கொண்டது என்னவென்றால் வெளிப்படைத்தன்மையானது சிறந்த ஆட்சிமுறைக்கு வழிவகுக்கும் என்பதாகும். அரசாங்கம் ஒன்று என்பது எமது அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டுள்ளதைப் போன்று மக்களுக்காக, மக்களினால் ஆக்கப்பட்டதாகும். எமது தனித்துவமான தேசிய சூழ்நிலைகள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களின் மாற்றங்களை சிறப்பாக பிரதிபலிக்கும் வகையில் திருத்தங்களுடன் தகவலறியும் உரிமைக்கான எமது தொலைநோக்கு தொடர்ந்தும் வளர்ச்சி கண்டுள்ளது.

மக்களால் இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையிலான தேசிய சொத்தே மத்திய அரசாங்கத்தினால் பராமரிக்கப்படும் தகவல்கள் என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டியதே மிகவும் முக்கியமானதாகும். ஜனாதிபதி ஒபாமா தமது முதலாவது நாளில், ''சந்தேகம் எழுகையில், வெளிப்படைத்தன்மை நிலவும்'' எனத் தெரிவித்தார்.

தமது முதலாவது முன்னுரிமைகளில் ஒன்றாக அரசாங்கத்தை ஜனாதிபதி ஒபாமா வெளிப்படைத் தன்மையானதாக ஆக்கியதைப் போன்று, இலங்கையில் ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மற்றும் ஏனைய அரசாங்க அதிகாரிகளின் அதேபோன்ற வாக்குறுதிகளால் நான் உத்வேகமடைந்துள்ளேன். உண்மையாக, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையான கொள்கையை இலங்கை வாக்காளர்கள் விரும்புகின்றார்கள் என்பதனை கடைசித் தேர்தல்கள் வெளிப்படுத்தின.

ஒரு வருடத்திற்கு முன்னர் தமது விஜயத்தின் போது செயலாளர் கெர்ரி அவர்கள் உறுதியளித்ததைப் போன்று, இந்த மிக முக்கியமான நல்லாட்சி மறுசீரமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் வாக்குறுதிகளில் நீங்கள் தேர்ச்சி எட்டும் போது அமெரிக்காவானது 'உங்கள் பக்கம்' இருக்கும்.

கடந்த 16 மாதங்களில் எமது அதிகரித்த ஒத்துழைப்பில் பிரதிபலித்தவாறு, எமது இராஜதந்திர உறவுகள் ஒருபோதும் இல்லாதவாறு உயர்ந்த நிலையில் உள்ளது. 2015 மற்றும் 2016இல் எமது அபிவிருத்தி ஒத்துழைப்புக்கள் சுமார் 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருடாந்தம் என அமைந்துள்ளது. நிதியாண்டு 2017இலும் அதே அளவினை வழங்குவதற்கு நிர்வாகம் கோரியுள்ளது. நல்லாட்சிக்கான, நியாயமாக ஆள்வதற்கான உங்களுடைய அர்ப்பணிப்பின் விளைவாக பொருளாதார வளர்ச்சியை தூண்டும் மேலதிக உதவியில் பல மில்லியன்களை அளிக்கக் கூடிய சாத்தியத்திற்கான பூர்வாங்க நிகழ்ச்சியினை வடிவமைப்பதற்கும் இலங்கையுடன் இணைந்து மில்லேனியம் சேலன்ஜ் கோப்பரேஷன் (MCC) செயற்படுகின்றது.

பெப்ரவரியில், அபிவிருத்தி, ஆட்சிமுறை, சக்தி, வர்த்தகம் மற்றும் பாதுகாப்பில் எமது முழுமையான அரசாங்கத்தின் ஒத்துழைப்பினை பரவலாக்கும், மீள்வலியுறுத்தும் அமெரிக்க-இலங்கை பங்காளித்துவ உரையாடலை எமது அரசாங்கங்கள் ஆரம்பித்தன. பதினொரு வருடங்களில் முதல் முறையாக இலங்கைக்கு அமெரிக்க கப்பல் ஒன்று வருகை தந்தது.

அதிகரித்து வரும் எமது நெருக்கமான பங்காளித்துவத்தின் ஊடாக, இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான புதிய வழிகளை நாம் தேடி வருகின்றோம். ஏப்ரல் மாத்தில், வொஷிங்டனில், அமெரிக்க-இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு வரைபுநகல் உடன்படிக்கை (TIFA) பேரவை கூட்டத்தை நாம் நடத்தினோம். இது எமது வர்த்தக மற்றும் தொழில் உறவுகளை மேலும் உறுதியாக்கும். விரிவாக்கம் பெறுவதற்கான பெரும் வாய்பு கொண்ட சுற்றுலாத் துறையில் சிறந்த பயிற்சிகளில் இலங்கையின் வர்த்தகத் தலைவர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான நிகழ்ச்சிகளையும் நாம் ஆரம்பித்துள்ளோம். வெளிநாட்டு, உள்நாட்டு என இரு தரப்பிலும், வர்த்தகங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் வெளிப்படைத் தன்மையான, தமது தீர்மானங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் அதிகாரிகள் பொறுப்பு கூறும் ஆட்சி முறைகளை விரும்புவார்கள் என அனுபவங்கள் தெரிவிக்கின்றன. அடுத்த இரண்டு வருடங்களில் பொது நிதி முகாமைத்துவ மறுசீரமைப்புக்களில் நிபுணத்துவத்தை வழங்குவதற்கான முயற்சிகளில் நாம் நிறைவுக் கட்டத்தை எட்டியள்ளோம்.

இலங்கை முழுவதிலும் மோதலுக்குப் பின்னரான நிலையான சமூகத்தை உருவாக்குவதற்கும் எமது முயற்சிகள் உதவுகின்றன. சட்ட ஒழுங்கினை வலுப்படுத்தும், வலுவான சிவில் சமூகத்தை கட்டியெழுப்பும், மற்றும் ஜனநாயகத்தையும், செழுமையையும் வலுப்படுத்தும் செயற்றிட்டங்களுக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் ஆதரவளிக்கின்றது. உங்களுடைய அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில், பொது நிதி முகாமைத்துவம், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றத்தை இலக்கு வைத்த உதவிகளின் ஊடாக மறுசீரமைப்புக்களுக்கு நாம் தற்போது உதவுகின்றோம்.

வேலைவாய்ப்புகளையும், செழுமையையும் உருவாக்குவதற்கு, உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான நீருக்கான அணுகும் வசதியை உறுதி செய்வதற்கு, பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் நலனுக்கு ஆதரவளிப்பதற்கு, மற்றும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து பிரஜைகள் மீட்சி பெறுவதற்கு உதவுவதற்கு என பல தசாப்தங்கள் உறுதியாக வடிவமைக்கப்பட்ட அமெரிக்க ஆதரவு முறையில் இவை அனைத்தும் கட்டியெழுப்பப்படுகின்றன.

உலகின் எந்தப் பகுதியிலும் நல்லாட்சியை வலுப்படுத்தும் கடமை என்பது இலகுவானது இல்லை. சட்டத்தில் பிரஜைகளின் தகவலுக்கான உரிமையை உள்ளடக்குவது, சரியான வழியில் செல்வதற்கான ஒரு முக்கியமான படிநிலையாகும். தமது நாட்டை சிறந்த இடமாக்குவதற்கும், இரகசியம், நம்பகத் தன்மை குறைந்த யுகத்திற்கு திரும்புவதனை தடுப்பதற்கான கருவிகளை அவ்வாறான சட்டம் இலங்கையர்களுக்கு வழங்கும்.

கடந்த வருடம் தேர்தல்களுக்கு முன்னர் தமது வாக்காளர்களுக்கு உங்களுடைய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் இவையாகும். நல்லிணக்கம், ஐக்கியம், சமாதானம், ஜனநாயகம், மற்றும் சட்ட ஒழுங்கு கொண்ட யுகம் ஒன்றிற்கான நிலைமாற்றத்தை விரும்பிய பெரும்பான்மையானோரை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். குறிப்பாக சிக்கலை களைவதற்கு, ஆனால் அனைவருக்கும் நல்லிணக்கம், உண்மை, நீதி மற்றும் மோதல் மீள நிகழாமை என்ற

அத்தியாவசிய பாதையை நோக்கி உறுதியளிக்கச் செய்யும் சிறப்பு மிக்க துணை அனுசரணை ஐ.நா தீர்மானம் ஊடாக, சர்வதேச சமூகத்தில் இலங்கையின் இருப்பினை மீளமைக்க உதவுவதற்கான உங்களுடைய தீர்மானத்தை நான் பாராட்டுகின்றேன்.

சிறந்த, மற்றும் நீடிக்கும் சமாதானம் மற்றும் செழுமையை நோக்கிய பாதையில் இந்த நாட்டை உறுதியாக வைப்பதற்கு முதன்மை தலைமைத்துவம் மற்றும் அர்ப்பணிப்பு தேவையாகவுள்ளவர்கள் உள்ளடங்கலாக உங்கள் மக்களின் தலைவர்களாகிய உங்கள் முன்னிலையில் வேறு முக்கிய தீர்மானங்களும் உள்ளன. அரசியலமைப்பை மேலும் நீதியானதாகவும், உள்ளடக்கமானதாகவும் ஆக்குவதற்கு, இலங்கையின் பல்வகைத்தன்மையை பிரதிபலிப்பதற்கும், கொண்டாடுவதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரிமைகள் மற்றும் சந்தர்ப்பத்தை உறுதி செய்வதற்கும், பிரஜைகள் தமது முழு ஆற்றலையும் எட்டுவதற்கு வலுப்படுத்துவதற்குமான முயற்சி ஊக்கமிகு, சாதகமான மற்றும் முதன்மை தொலைநோக்கை பிரதிபலிக்கின்றது.

உங்கள் பிரஜைகளின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக செயற்படும் நீங்கள், நீடித்த மற்றும் சாத்தியமான மாற்றங்களை கொண்டு வருவதற்கான அரிய மற்றும் வரலாற்று சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளும் வேளையில், ஐக்கிய அமெரிக்க மக்களும், அரசாங்கமும் உங்களுடன் இருப்பதுடன், நண்பர்களாக உங்களுடன் நடந்து வரும் என்பதனையும் தெரிந்து கொள்ளுங்கள்.

தேவையாகவுள்ள சில மறுசீரமைப்புகள் இலகுவானது இல்லை. இலங்கையில் சமாதானம் மற்றும் ஜனநாயகத்தின் புதிய சூழல், தேவையான மாற்றங்களை கொண்டு வருவதற்கான அரிய சந்தர்ப்பத்தை தருகின்றது. புதிய தேசிய பாதுகாப்பு சட்ட கட்டமைப்பு ஒன்றினால் பழைமையான பயங்கரவாத சட்டத்தை மாற்றுவது, எதிர்கால துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு மாத்திரமன்றி, இலங்கைக்கும், அதன் ஜனநாயகத்திற்கும், பிரஜைகள் உரிமைகளுக்குமான நவீன அச்சுறுத்தல்களுக்கும் எதிரான வலுவான பாதுகாப்பையும் உறுதி செய்யும்.

யுத்தத்தின் போது இரண்டு தரப்பிலும் தமது அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு உண்மை, தீர்வு மற்றும் நீதியை கொண்டு வருவதற்கான, மற்றும் பல வருடங்கள் முரண்பாட்டின் பின்னர் நிலையான நல்லிணக்க மற்றும் சகோதரத்துவ சூழலை போஷிப்பதற்கு நம்பகமான மற்றும் வினைத்திறன் மிக்க நிறுவனத்தை உருவாக்குவதற்கான இதயத்தை பிசையும் தேவை உண்டென்பதனை நீங்கள் அனைவரும் புரிந்து கொள்வீர்கள்.

முன்னோக்கிச் செல்வதற்கான சிறந்த வழியை தீர்மானிப்பதற்கு சாதாரண பிரஜைகள் மற்றும் சிவில் சமூகத்துடன் உங்களுடைய அரசாங்கம் கலந்துரையாடல் ஒன்றை ஆரம்பித்துள்ளது. காணாமல் போனவர்களுக்கான அலுவலக உருவாக்கம் மற்றும் வேறு பயனுள்ள படிநிலைகள் உள்ளடங்கலாக இந்த காயங்களை ஆற்றுவதற்கான உறுதியான தேர்ச்சியை நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

தகவலறியும் உரிமை தொடர்பில் கலந்துரையாடல்களை நீங்கள் முன்னெடுக்கும் வேளையில், மறுசீரமைப்பு மற்றும் நல்லாட்சிக்கான இலங்கையின் அர்ப்பணிப்புக்கான தெளிவான அடையாளத்தை உங்களுடைய உழைப்பு வழங்கும். யுத்தம் மற்றும் இனவாதம் அற்ற, மற்றும் பரஸ்பர மதிப்பு, ஒருமைப்பாடு, ஜனநாயகம், வெளிப்படைத் தன்மை மற்றும் செழுமை கொண்ட சிறந்த மற்றும் சாதகமான எதிர்காலத்தை பெரும்பான்மையான இலங்கையர்கள் விரும்பும், வரலாற்று சிறப்பு மிக்க, பொன்னான சந்தர்ப்பத்தில் உங்களுடைய பிரஜைகளுக்கு சேவையளிக்க நீங்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள்.

மோதலுக்குப் பின்னரான நிலைமாற்றத்திற்கு புத்தாக்க தீர்வுகளுடன், தமது ஐ.நா வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் ஜனநாயாக மாதிரியாக, பல தசாப்தங்கள் மோதலின் பின்னர் இலங்கையானது உண்மையில் மீண்டும் உலக தளத்திற்கு வந்துள்ளது என்ற வலுவான செய்தியை சர்வதேச சமூகத்திற்கு அனுப்புவதற்கான சந்தர்ப்பத்தை அனுபவிப்பதும் உங்களுடைய அதிர்ஷ்டமாகும்.

இங்கு உரையாற்றுவதற்கு என்னை அழைத்தமைக்கு மீண்டும் நன்றிகள். உலக பொருளாதாரத்திற்கு பங்களிக்கும்: மனித உரிமைகள், நம்பகத் தன்மை, நிலைமாற்று நீதி மற்றும் ஜனநாயகத்தை முன்னிறுத்தும், மற்றும் சர்வதேச சட்டத்தை மதிக்கும், சர்வதேச சமூகத்தில் தலைவராக இலங்கை சரியான இடத்தை நிரூபிப்பதற்கான உங்கள் முயற்சிகளில், மேலதிக ஆதரவினை வழங்குவதற்கு, மேலும் வளங்களை கொண்டு வருவதற்கு மற்றும் மேலதிக நிபுணத்துவத்தை பகிர்வதற்கான சந்தர்ப்பங்களையும் அமெரிக்கா எதிர்பார்த்திருக்கின்றது.

உங்களுடைய இன்றைய அர்த்தமுள்ள உரையாடலிற்கும், நல்லாட்சியினை நோக்கிய பாதையில் பிரதான அம்சமான இந்த முக்கிய சட்டத்தின் வெற்றிகரமான பாதைக்கும் நான் வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மிக்க நன்றி.

##